88

உ

சமரசம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 SEP 19
MADRAS

ஓர் தமிழ் மாத வெளியீடு.

வருட சந்தா ரூ. 1—0—0

Vol 2 | **September & October,** | **Book 5**

புரட்டாசி-மீ

பொருளடக்கம். பக்கம்.

1.	கடவுளைக்காணும் வழி	87
2	சமரசம்.	88
3.	தர்மம்	91
4.	சுகாதார விதி	95
5.	சாமி பலி கேட்குதா?	95
6.	முத்துமாலை	96
7.	சங்குதொனி	97
8.	கைத்தொழில்	99
9.	சினிமா பகுதி	102
10.	சுயமரியதை வீரர்கள் தரித்துக் கொள்ளவேண்டிய கங்கணம்	103
11.	வெள்ளைக்காரரின் நோக்கு	105
12.	கதர்	106
13.	ஒட்டுரிமை	107
14	சமாச்சாரத்திரட்டு	101

Edited & Published by :—
M A. Varadaraja Mudaliar.

PRINTED AT THE S. R V. PRESS, VILLUPURAM.

"சமரஸம்"

ஓர் மாதாந்த பிரசுரம்.

"சமரஸம்" கிராம சீரமைப்புத்திட்டங்கள், பொருளாதாரம், சுதேச கைத்தொழில்கள், சமரஸ சன்மார்க்க சதாசாரம் இவைகளை மக்களிடை பரப்புதற்கு அரிய தொண்டுசெய்யும் ஓர் தேசியபத்திரிகை. மாதிரி காப்பிக்காக 5 காலணு ஸ்டாம்பு அனுப்பவும்.

வருட சந்தா		தனிப்பிரதி	
உள்நாடு ரூ.	1—4—0	உள்நாடு ரூ.	0—2—0
வெளிநாடு ரூ.	1—12—0	வெளிநாடு ரூ	0—3—0

100க்கு மேல்ஆர்டர் அனுப்பும் ஏஜண்டுகள் முன்பணமனுப்பினல் பிரதி 1க்கு ஓரணமேனிக்கு கொடுக்கப்படும்.

"விளம்பர விகிதம்" முழுப்பக்கம் 5 ரூ.; அரை பக்கம் 3 ரூ.

மானேஜர்:— "சமரஸம்" ஆபீஸ்,
லாலி பில்டிங், விழுப்புரம்.

செல்வ விநாயகர் காபி ஓட்டல்

புதுச்சத்திரம், விழுப்புரம்.

நமது காபி ஓட்டலில் வழக்கமாக வந்து காப்பி சாப்பிடுகிறவர்கள் நமது நாணயம் நன்கறிவார்கள். கலப்பில்லாத சாமான்களால் தயாரிக்கப்பட்டவைகள் என்பதை நமது நண்பர்களே அறிவார்கள். நீங்களும் ஓர்முறை சோதித்து பாருங்கள்.

28 SEP 1936
MADRAS

ஓம் பரப்பிரமணே நம:

சமரஸம்.

செயற்பால தோருமறனே யொருவன்
குயற்பால தோரும்பழி—குறள்.

சமரசச் செல்வி | செப்டெம்பர் & அக்டோபர் 1936 | Vol. 2 Book. 5

கடவுளைக் காணும் வழி.

பொது ஜனங்களுடைய வழக்கவொழுக்கங்கள் சன்மார்க்கங்கள் நித்திய அநுஷ்டான சுகாதார வசதிகள் இவைகள் மக்களிடை மலிந்து காணப்படவேண்டுமாயின், வீண் சிலவுகளை நிறுத்தி பொறுப்பான விஷயங்களில் சிலவிட மக்களை மனந் திருப்புவதற்கேற்ற சக்தி வாய்ந்த பிரசாரர்கள் இன்றைய கால அவசியப்படி நமது நாட்டிற்கு அவசியம் வேண்டற்பாலது. அதனோடு கிராம கைத்தொழில் தேசீய உணர்ச்சியை உண்டுபண்ணுதல் முக்கியமாயிருத்தல் வேண்டும்.

இத்தகைய பிரசாரங்களுக்கு தாராளமாய் பொருளுதவி செய்து மதபிரசாரத்தை வளர்ப்பதே இக்காலத்தில் கடவுளை வழிபடும் முதற்தொண்டாகும். தொழின் முறையிலுள்ளவர்கள் தொழின் முறையிலில்லாத அறிவாளிகளுடைய ஏழைகளுடைய கஷ்ட முகத்தை பார்ப்பதே கோவிலுக்குப் போகும் முதல் வாயில்.

சமரஸம்.

ஆங்கில ஆக்ஷி சமரஸ முறையில் நடைபெறுதலே கிடையாதென்னலாம்.

உத்தியோகம், சம்பளம், உபகாரம், கிராம சீர்திருத்தம், சுகாதாரம், பொருளாதார நிலை, நீதி இவைகள் நகரம் பட்டிணம் கிராமம் என்பவற்றுள் மாறுபட்டுக்கொண்டேயிருக்கின்றன.

அவற்றுள் உத்தியோகத்தை மட்டும் ஆராய்வோம். சென்னைபோன்ற நகரம் பரிபாலன விஷயமாக ஓர் பெரிய நகரமாயிருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் உத்தியோக முறையில் அங்குள்ள எல்லா தலைமை ஆபீசிலும் சென்னைவாசிகளை நிரப்புவதல்லாமல் அங்கிருக்கும் அறிவாளிகளையே மற்ற ஜில்லாக்களுக்கும் உத்தியோகஸ்தராய் நியமிக்கப்பட்டு வந்துவிடுகிறார்கள்.

ஜில்லா டவுனிலுள்ள ஹெட்குவார்ட்டர் ஆபீஸ்களிலும் அப்படியே. அந்தந்த டவுனிலுள்ள எல்லா தலைமை ஆபீஸ்களிலும் அங்குள்ள அறிவாளிகளை நியமிப்பதல்லாமல் மற்ற எல்லா தாலுக்காக்களிலுமுள்ள பலவகை இலாகாகளுக்கு ஆபீஸர்கள், குமாஸ்தாக்கள், பியூன்கள், மேஸ்திரிகள் முதலிய பலவகை உத்தியோகங்களும் தலைமை ஆபீஸில் உத்தியோகஸ்தர்களின் சொந்தக்காரர்கள் அல்லது அவர்கள் வேலைக்காரருக்கு சொந்தக்காரரையாவது பொருக்கி அனுப்பிவிடுகிறார்கள். கண்டிராக்டர்களும் அப்படியே. இதனால் என்ன நேரிடுகிறது. பொருளாதார நிலை பங்கப்படுகிறது. சர்க்கார் வசூலிக்கும் வரிப்பணம் பூராவும் உத்தியோகஸ்தர் கண்டிராக்டர் மூலமாய்தான் மறுமடியும் ஜனங்களிடத்தில் பரவவேண்டும். உத்தியோகஸ்தர்கள் சம்பாதித்து வீடு கட்டுவார்கள். அதனால் கொற்றர், தச்சர், கருமார் கூலிகள் பிழைப்பார்கள். நகை செய்வதால் பொற்கொல்லர் பிழைக்கிறார்கள் வியாபாரி விவசாயிமுதல் எல்லா கைத்தொழிலாளிகளுக்கும் கூலி கிடைக்கும். குடியானவர்களைவிட உத்தியோகஸ்தர்களே கொஞ்சம் அதிகப்படி செலவழிப்பார்கள். அதனால் பொருளாதாரம் சம நிலையில் நிற்கும்.

28 SEP 1938
MADRAS

ஆனால் இப்பொழுது பிற்போக்கான தாலுக்காக்களிலும் பிர்காக்களிலும் படித்த அறிவாளிகள் பீடிகடை வைப்பதும் பொய்சாக்ஷி கொடுமுடி செய்வதுந்தவிர வேறு தொழில் கிடையாது. அந்த தாலுக்காக்களிலிருந்து உத்தியோகஸ்தரை ஏற்கனவே பொறுக்கி எடுக்காததால் வாழையடிவாழையாய் படித்து முன்னுக்கு வருவோரும் கிடையாது. படித்தாலும் சிபார்சில்லாமல் கெடுவோரும் பல.

இதனால் எல்லாரும் பட்டணவாசங்களையே நாடி ஓடி ஜீவிக்க முயல்கிறார்கள். கிராமங்கள் நாளுக்குநாள் க்ஷீணதிசை யடைகின்றன. பல தாலுக்காக்களும் கிராமங்களும் பாழடைந்து வருகின்றன. மனித வாழ்வுக்குரிய சுகாதார வசதிகளெல்லாம் கிராமங்களென பறை சாற்றிவரும் கவர்ன்மெண்டும் அறிவாளிகளும் ஏன் பொருளாதாரத்தை அங்கு நிலைக்கச்செய்யப்படாது? தொழிற்சாலைகளும் உத்தியோகஸ்தர் உறைவிடங்களும பட்டணவாசமாகையால் வயிறு பிழைக்க பட்டணத்தை நாடி ஓடி வருகிறார்கள். வயிர் பிழைக்க அங்கே ஓடினவுடன் உத்தியோகஸ்தர்களோடு போட்டிப்போட்டுக்கொண்டு ஆடம்பர வாழ்கையை தாங்களும் செய்துக்கொள்ள தலைப்படுகிறார்கள். இந்த முறையில் தர்மநெறியை முற்றிலும் மறந்துவிடுகிறார்கள். பட்டணவாசம், மற்றவர்களைப்போல் நாமும் ஆடம்பரம் செய்ய வேண்டுமென்று எண்ணினவுடனே அவர்கள் விவகாரங்களுக்கே தனி நியாயம் கண்டு பிடிக்கிறார்கள். சர்க்காருக்கு கிராமங்களை ஆக்ஷி செய்வதைவிட பட்டண வாசஸ்தலங்களை பரிபாலனம் செய்வது கடினமாக ஆகிவிடுகிறது.

ஆகையால் எல்லா உத்தியோகங்கள் கண்டிராக்டர்கள் முதலிய உத்தியோகங்களையும் பல பொருளாதார வ்சதிகளையும் அந்தந்த ஊரில் உள்ளவர்களுக்கு கொடுத்துதவவேண்டும் பரிபாலன வசதிகளுக்காக உத்தியோகஸ்தர்களை வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டாலும் ஜாதிவாரி திட்டம்போல் தாலுக்காவாரியாக யொத்த உத்தியோகஸ்தர்களை கணக்கிட்டு கொடுக்கவேண்டும்.

பொதுவாக பழையகாலப்படி அந்தந்த தாலுக்காவி லுள்ள எல்லா கீழ்தர உத்தியோகஸ்தர்கள் அங்கீகரித்து பொறுக்கி எடுக்கும் நபர்களையோ அல்லாது அந்த தாலுக்காவிலுள்ள வேறு நபரையோ ஜில்லா ஆபீசர்கள் அங்கீகரித்துவந்தால், இவ்வித பொருள் கஷ்டம் பொங்காது. கீழ்தர உத்தியோகஸ்தர் பாரபக்ஷமாக நடந்துகொண்டதாக பிராது வந்தால் அதை விசாரிக்கவேண்டுமேயொழிய அவர்களுக்கிருக்கும் உரிமைகளை பறிக்கக்கூடாது.

இப்படி செய்வதினால் ஓர் தாலுக்காவில் நூறு உத்தியோகஸ்தர்கள் மட்டுமல்ல அவர்களை நம்பிய ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கும் பிழைப்பிருக்கிறது. இதுதான் சமரச திட்டமாகும்.

உத்தியோகஸ்தரைப்பற்றி மற்றுமொரு பாரபக்ஷம் அபாரமாயுள்ளது பணம், சொத்து, நிலம் உள்ளவர்களே உத்தியோகத்தை அடைந்து வருகிறார்கள். ஏழைகளுக்கு உத்தியோகம் கிடைப்பது பகற்கனவாயிருக்கின்றது. பெரிய உத்தியோகங்களும் அப்படியே ஜமீன்தார், மிராசுதார், ராஜாபட்டம் பெற்றவர்களுக்கே உயர்ந்த உத்தியோகம் கொடுக்கப்பட்டு வருகிறது. இது பொருளாதார நிலைதனை சரிப்படுத்துவதாகவாவது சமன்தூக்கு முறையாகவாவது நினைக்கமுடியுமா? மிராசுதார்கள் உத்தியோகங்களுக்கு ஆசைப்பட்டால் அவர்களுக்கிருக்கும் நிலங்களை நிலமில்லாத அறிவாளிகளுக்கு அளித்தால். போகட்டும், இவர்கள் நிலத்தையாவது பண்படுத்துவதில் தங்கள் அறிவை செலுத்துவார்கள். மீசைக்கும் ஆசை கூழுக்கும் ஆசை என்றபடி பொருளாதார நிலையும் வேறு வசதிகளும் ஒரு மனிதனிடத்தே தங்கிவிடுகிறது அல்லது மேனாட்டாரைப்போல் தங்கள் சம்பளத்தில் ஒருபங்கு பொது நன்மைகளுக்கு கொடுத்துதவும் வசதியாவது இந்நாட்டிலுண்டா! அதுவுமில்லையே! மற்றும் எவ்வாறு பொருள் சமநிலையில் நின்று மக்களுக்கு சாந்தி விளைவிக்கும். இப்படிப்பட்ட ஊழல்களெல்லாம் அடக்கு முறையால் வெளிக்கு சாந்திமயமாய் விளங்கினாலும் மக்கள் உள்ளத்தில் கன்னான் உலைபோல் கொதிக்கிறது.

இனியாவது நிலம் உள்ளவன், தொழில் உள்ளவன், வியாபாரவசதி உள்ளவன், பணக்காரன், வேலையில்லாதவன் என்கிற பாகுபாடுகளையுணர்ந்து உத்தியோகம் கொடுப்பதுமல்லாமல் அந்தந்த தாலுக்காக்களுக்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களை அவ்விடங்களிலிருந்தே தெரிந்தெடுத்தல் நலமானது.

இம்முறைகளெல்லாம் தனிப்பட்ட மனிதர்களுடைய நன்மையைமட்டுமல்ல. மொத்தத்தில் பொருளாதார நிலை சமரஸப்பட்டு நன்மையடைய இவைகளே மூல காரணங்களாகும்.

தர்மம்.

உலகத்தில் எல்லா மதங்கள் கூறும் ஞானத்தின் சிகரம் இந்து மதத்திலுள்ளது. தர்மம் என்பது சட்டம் விதி நியாயம் என்பது பொருள்படும். தர்மமென்பது விதி விலக்குகளை தாயகமாகக்கொண்டுள்ளது. தர்மமென்பது புண்ணியமென்றும் ஈகை என்றும் பொருள்படும். மற்றும் பரிபக்குவமடைந்த உயிர்கள் பரிபக்குவமடையா உயிர்களுக்கு கைதூக்கி விடுவதும் குற்றங்களை மன்னிப்பதுமாகும்.

தர்மத்திற்கு இதுதான் பொருளென குறிப்பிட்டு சொல்ல முடியாவிட்டாலும் அந்தந்த காலதேச வர்த்தமானத்திற்கேற்றபடி உயிர்களின் அறிவின் ஏற்றதாழ்வுக்கும் சமயத்திற்கும் நிலைமைக்கும் ஏற்க உயிர்களுக்கு ஹிதம் செய்வதே தர்மமெனப்படும். இங்கு தர்மத்தில் எடுத்துக்கொண்ட பகுதி ஈகை. ஈகை பலவகைப்பட்டது வேண்டுவார் வேண்டுவதே ஈகை எனப்படும். அவ்வித ஈகையுள் முதற்படியாயுள்ளது அன்னதானம்.

அன்னதானம்:- அன்னதானத்துள் சிறந்தது வேறொன்றுமில்லையென இந்நாட்டு சகல நூல்களும் முறையிடுகின்றன. அன்னதானம் இப்பாரதநாட்டிற்தான் சிறந்து விளங்கியதென்பதை மறுக்கமுடியாத விஷயமாகும்.

அன்னதானமே உயிர்களுக்கு செய்யவேண்டிய முதற் பகுதி (Firstaid) இந்நாட்டில் வேளாளர் விடுதிகளில் அன்னம் வழங்குவர், செட்டிமக்கள் ஆங்காங்கு அன்னதான சத்திரங்கள் கட்டி மக்களுக்கு அன்னமளித்து வருகிறார்கள். பழையகால ராஜாக்கள் தங்கள் வருமான முழுவதையும் அன்னதானத்திற்கே செலவிட்டுவந்தார்கள். அக்காலத்து அறிவாளிகள் பணத்தாசைப் பூதத்துக்கு அடிமைப்படாமல் குச்சு உபாதைக்கு ஆகாரத்தை உண்டு பிரபந்தபாக்களை வானளாவி பாடி சந்தோஷமடைந்து வந்தார்கள்.

அப்படிப்பட்ட உன்னத நோக்கமெல்லாம் தற்காலம் மாய்ந்துவிட்டது. அத்தகையறத்திற்கிடும் ஆகாரங்களை ஓர் கோஷ்டியினர் தங்களுக்கேயுரித்தானது என்று பாத்தியம் கொண்டாடிவந்ததால் அவ்வித அன்னதான சத்திரங்களெல்லாம் மூடப்பட்டு வருகின்றன. இதற்கு மேனாட்டு அரசியல் முறையும் மற்றொரு காரணமாகும். என்ன செய்தார்கள்? உயிர்களுக்கு ஆகாரத்தை வாரி வாரி கொடுத்த இந்நாட்டு அரசியல் முறைக்கு பதிலாக பணத்தை வாரி வாரி கொடுக்கும் மேனாட்டு முறை பிடித்துக்கொண்டது. சாப்பாட்டு சத்திரத்தில் கூடியிருந்த கூட்டமெல்லாம் திடீரென கலைந்து அரசாங்க மண்டபத்திற்கு பொருளை குவிக்கலாமென ஓடிவந்து விட்டார்கள். அதன் பயனாக போட்டிபந்தயம் நடைபெற்று வருகிறது மக்கள் தர்மசாஸ்திரத்தை ஒதுக்கிவைத்துவிட்டு பணத்தை சேர்க்கவும் அதை ஆடம்பரவாழ்க்கையில் செலவழிக்கக்கூடிய தந்திரங்களை கற்கவும் முற்பட்டுவிட்டதின் விளைவு என்னே! துப்பற்றவர்களும் திக்கற்றவர்களும் தப்பற்றவர்களும் அந்த பந்தய ஓட்டத்தில் கலந்துகொண்டு ஓடிப்பார்த்து வீழ்ச்சியுற்றார்கள். ஆங்கில ஆட்சி அனைவருக்கும் சமரச முறையில் நடந்து வருகிறது என்றாலும் பொருளாதார நிலைமாறு பாடல்களால் எத்தனை கஷ்டங்களுக்குள் குடிகள் ஆளாகிவருகிறார்கள். அவற்றில் ஒன்றை விளக்கி காட்டுவோம் சர்க்கார் நிர்வாகம் ஒருபக்கமிருக்கட்டும். சர்க்கார் உதவியால் நடந்துவரும் வியாபாரப் பெருக்கில் ரயில்வே ஒன்று. ரயில்வே வியாபாரம் ஓர் (Sytomatic) முறையாகும். இதனால் எத்தனையோ உயிர்களுக்கு நிலைவரமான பிழைப்புக்கு இடம்

ஏற்படுகிறது. இன்னும் பலவித நன்மைகளுமுள்ளன. ஆனால் மற்றொருபக்கம் ஏழைகளுக்கும் குடியானவர்களுக்கும் சாதுக்களுக்கும் பழித்துகாட்டுகிறது. அவர்களை அலட்சியம் செய்கிறது. காரணம் ரயில்வே கட்டணம் மாத மாதம் ஒழுங்காகவும் பெருவாரியாக சம்பாதிப்பவர்களுடைய நிலைமையை ஒட்டி விதித்திருக்கிறது. அதனால் மக்கள் படும் கஷ்டங்களுக்கோர் அளவில்லை. திக்கற்றவர்களுக்கு ஏதேனும் இலவச பிரயாண வசதிகளுமில்லை. ஆயிரம்பேர் ஏறிச்செல்லும் ஓர் வண்டித் தொடரில் இரண்டு ஏழைகள் பிரயாணம் செய்யலாகாதா? ஆறுபேர் ஏறிச்செல்லும் கட்டைவண்டியில் ஓர் ஏழையின் கஷ்டத்தைப்பார்த்து ஏற்றிக்கொள்ளும் தர்மகுணமுள்ள மக்களுக்கு சௌக்கியம் உண்டானால் எத்தனை ஏழைகள் பிழைப்பார்கள். ஏதோ டிக்கட்டில்லாமல் போகும் இரண்டு பேர்வழிகளுக்காக 4 பேர் டிக்கட் பரிசோதகர் வண்டிகளில் வருகிறார்கள். நூறு ரூபாய் நஷ்டத்தை கண்டுபிடிக்க ஆயிரம் ரூபாய் செலவிடுவதே (Sytomatic) வியாபார முறையின் ஒழுங்காகும். தாக்ஷண்யமில்லாத வியாபார முறை என்பது பொருள். இது ஒருபக்கமிருக்கட்டுமென்றாலோ ஒரு கையில் அடித்து மற்றொரு கையால் அணைப்பதாவது உண்டா! ஜங்ஷன்களிலும் மற்ற ஸ்டேஷன்களிலும் பிரயாணிகளுக்கு ஆகாரவசதிகளேதேனுமுளதோ! அதுவும் வெகு கிராக்கிதான். டவுனில் ஒரு பை விலையுள்ள பொருள் 6 பைக்கும் 2 அணா சாப்பாடு 6 அணாவுக்கும் விற்கப்படுகிறது மற்றும் பல வஸ்துக்களுமப்படியே. உணவுப்பண்டங்கள் விற்கிறவர்களிடத்தில் கட்டணம் வாங்குவதினால்தான் இக்கஷ்டம் உண்டாகிறது. சர்க்கார் எல்லோரையும உத்தியோகமயமாய் பார்ப்பதே இதற்கு காரணமாகும் எல்லாரும் 50 ரூபாயிக்கு மேற்பட்ட சம்பளக்காரராக நினைக்கிறார்கள். உத்தியோகஸ்தர்களுக்குகூட அதிக சம்பளம் கொடுக்கிறார்களேயொழிய அந்த பணத்தை பிடுங்க பலவகை சூழ்ச்சிகள் சிங்காரிக்கப்பட்டிருக்கின்றன.

எங்கள் நாட்டு செட்டி மக்களிடம் இந்த ரயில்வே நிர்வாகமிருந்தால் பிரயாணிகளுக்கு ஜங்ஷன்களில் இலவச சாப்பாடு கிடைக்கும் தண்ணீர் வசதி அதிகமிருக்கும் ஏழைகளுக்கு இலவச

டிக்கட் கொடுக்கப்படும். என்பதில் சிறிதும் ஐயமில்லை. ரயில்வே கட்டணம் மைலுக்கு 1 பை வீதம் வசூலிக்கப்படும். நிற்க முனிசிபாலிட்டி யூனியன்களிலுள்ள ஹோட்டல்கள் உத்தியோகஸ்தர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் ஆகாரத்தை தயாரித்து கொடுக்கின்றன. இந்து தர்மப்படி ஆகாரத்தை விலைக்கு விற்கப்படாது. ஜீவனோபாயத்தை முன்னிட்டு விற்றாலும் ஓரணாவிற்கு ஓர் வேளைக்கு ஆகாரம் கிடைக்கும் வசதிகளுண்டா? இல்லை. ஒரு நாளைக்கு 8 அணாவுக்கு குறைந்து ஆகாரம் ஒருவன் அடையமுடியாது. ஆகாரம் ஒன்றிற்கே மாதம் 15 ரூபாய். பிரயாணச்செலவு 15 ரூபாயானால் ஒருமனிதன் நல்வாழ்வுக்கு வேண்டிய 100க்கணக்கான விஷயங்களுக்கு தினம் ஓரணா சம்பாதிக்கும் ஏழைகள் எவ்வாறு நன்மைபெற முடியும்! இதற்கு முனிசிபாலிட்டியார் ஹோட்டல்களுக்கு பொருளுதவி செய்து காப்பாற்றிவருவதற்கு பதிலாக வரிப்பளு சுமத்தி அன்னத்தை அரிதாக்குகிறார்கள். உணவை கனவாக்கி விடுகிறார்கள்.

கிராமங்களுக்கு உத்தியோகஸ்தர்கள் சென்றால் கிராம நவுக்கர்கள் ஆகார வசதிகள் செய்கிறார்கள். கிராம பெரிய தனக்காரர்கள், பட்டணவாசம் வந்தால் 1 அணா செலவிலாவது ஆகாரம் அளிக்கும் வசதியுண்டா? கிராம மணியக்காரர்கள் இதற்கு நேர் மூலமாய் பதில் சொல்லாவிட்டாலும் மறைமுகமாக தூற்றுகிறார்களே? புதிய நாகரீக வேகத்தில் கண்ணுக்கும் மூக்கிற்கும், காதிற்கும், வாய்க்கும் இன்பம் பயக்கும் காக்ஷிகளும் கருவிகளும் மலிந்துகிடக்கின்றன. ஆனால் வயிற்றுக்கு உணவுமட்டில் கிடைப்பது நினைவாகவே இருக்கிறது. நமது நாட்டில் ஏழைகள் வயிரார உண்டுகளிக்கும் நாள் என்நாளோ!

நமது சமரசப பத்திரிகையில் கிராம புனருத்தாரண வேலைகளைப்பற்றி தொடர்ச்சியாக வெளிவரும் இதற்கு கிராம பெரியதனக்காரர்கள் சந்தாதாரராய் சேர்ந்து ஆதரித்தால்தான் இருதரப்பார்க்கும் நன்மை பயக்கும்.

சமரச ஆபிஸ் விழுப்புரம்.

சுகாதார விதி

காலரு.

தற்காலம் ஆங்காங்கு விஷபேதிகள் அதிகம் ஏற்பட்டு பல உயிர்களுக்கு ஆபத்து விளைவித்து வருவதால் பொது ஜனங்கள் சுகாதார விதிகளை நன்கு அனுட்டானத்தில் கொண்டுவரவேண்டியது.

ஆகாரம். அழுகல், ஊசல், நாற்றமெடுத்த பதார்த்தங்களை அருந்தலாகாது. மீன் புலால் முதலியவைகளில் விஷக்கிரிமிகளிருப்பதால் இந்தகாலங்களில் அவைகளை நிறுத்திவைப்பது நலம் அல்லது அவைகளை நன்றாய் சுத்திசெய்து புசிப்பதே அவசியம். கூடிய வரையில் சூடானதும் குறைவான ஆகாரங்களையுண்ணலே நலம்.

பானம். எப்பொழுதும் காய்ச்சி குளிர்ந்த ஜலத்தை குடிக்கவேண்டும். மதுபானம், சோடா, ஆரஞ்சு பானங்கள் மூலியமாயும் இவ்வித தொத்து வியாதிகள் அணுகின்றன. உடைகளும் வீடுகளும் சுத்தமாயிருத்தல் முக்கியம். வீடுகளை சுண்ணும்பு அடிப்பதும், சாக்கடை, கக்கூஸ் முதலியவைகளை சுத்தியாய் வைத்திருப்பதும் வியாதியை தடுக்கும் முறைகளாகும்.

—o—

சாமி பலி கேட்குதா?

ஆடு அக்கினிபகவானிட வாகனம் கோழி சுப்ரமண்யரிட கொடிகாவலன். பன்றி விஷ்ணு அவதாரம். காளை பரமேஸ்வரன் வாகனம். எருமை எமதர்மனிட வாகனம். அப்படியானல் இவைகளை எந்ததேவதைக்கும் பலியிடாதீர்கள்! அதனல்

தேவர்களுக்குள்ளேயே சண்டையுண்டாகும். சேவலை கொன்றால் சுப்ரமண்யருக்கு கோபமுண்டாகும். ஆட்டைக்கொன்றால் அக்கினிபகவானுக்கும் கோபம் பிறக்கும். சிவன் மூன்றாவது கண்ணை விழித்துப்பார்ப்பார். தேவர்களுக்குள் சண்டைவளர்க்கப் போகிறாயா? அல்லது சாமிகளுக்கு மிருகங்களை பலியிடுவதைவிட்டு பால்பூசை செய்யப்போகிறாயா?

ஜீவகாருண்யத்தை முன்னிட்டே ஆதியில் வித்வான்கள் பிராணிகளை தேவர்களுக்கு வாகனமாக வர்ணித்தெழுதப் பட்டுள்ளன.

மறம் ஒழிக; அறம் வளருக.

சி. சாமிக்கண்ணு,
ஜீவரக்ஷா பிரசார சபை, திண்டிவனம்.

முத்துமாலை

மன்னிப்பு.

எல்லா குற்றங்களையும் மன்னித்துவிடு எல்லா மனஸ்தாபங்களையும் விட்டுவிடு அன்றாடம் புதிய புதிய உணர்ச்சியிலும் புதிய வாழ்க்கையிலும் நாம் மாறுதலடைவதுபோல் பழையகால தவறுதல்களையும் பழையகால மனஸ்தாபங்களையும் மறந்து விடுவதே நலம். இதுவே மனிதனது வெற்றிக்கும் மனோசுகத்துக்கும் கண்மலையாகும்.

நீ தினந்தோறும் செய்யும் குற்றங்களுக்காக ஆண்டவன் இடத்தில் மன்னிப்புகேள். மனச்சாந்திக்காக அவரிடம் பிரார்த்தி உன் தப்புகள் உண்மையில் மன்னிக்கப்பட வேண்டுமானால் மற்றவர்களுடைய குற்றங்களை மன்னிக்க நிமிஷமும் தயங்காதே. அறியாமையால் செய்யும் அவர்கள் தொந்தரவுகளை பொருட்படுத்தாதே.

உனக்கு ஒருவன் கொடுக்கவேண்டிய கடனை மன்னித்து விடு. அப்படியானால் உன்னுடைய கடன்களும் உனக்கு மன்னிக்கப்படும். வாங்கின கடனை கொடுக்க பலவழியிலும் சக்தியில்லாத ஒருவனுக்கு நாம் செய்ய வேண்டிய உதவி எது? நீ பட்ட கடனுக்காக உனக்கு ஒருவன் என்னசெய்ய வேண்டுமென்று நீ நினைக்கிறாயோ அதுதான்.

ஒருவனுடைய குற்றத்தை ஒருதரமல்ல ஆயிரம் தரமும் மன்னி. கடன் நூறு ரூபாய்மட்டுமல்ல ஆயிரம் ஆயிரமாக இருந்தாலும் மன்னித்து விடு. ஏனெனில் தவறு செய்வதும் கடனிறுக்கசக்தியற்றுழல்வதும் மனித இயற்கையாயிருக்கின்றன பிள்ளைப்பருவத்திலிருந்து உலக அனுபவங்களையும் அறிவையும் கற்றுக்கொண்டு மறுபடியும் சிறு பிள்ளைகள்போல கபடற்று நடக்கிறவர்களே உத்தமர் எனப் படுகிறார்கள்.

சங்கு தொனி.

கலம்பகம்.

இந்நாட்டு வேதபுராண கதைகளெல்லாம் மனிதனை சாத்மீக வாழ்க்கையில் ஈடுபடுத்துமேயொழிய மனித சமூகத்தை முன்னேற்றத்துக்கு கொண்டுவரும் விஷயத்திலும் பொருளபிவிர்த்தி விஷயத்திலும் பாதகம் விளைவிக்கக் கூடியவைகளாயிருக்கின்றன சாதிச்சமய ஊழல்களும் இந்த இனத்தைச்சேர்ந்தவைகளே.

காங்கிரஸ் ஜஸ்டிஸ்கக்ஷிகளின் நோக்கங்கள் கிராமங்களில் இன்னும் வேரூன்றவில்லை. அவைகளால் குடியானவர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் பெரிதும் சாதகமே கிடையாது. அவைகள் உத்தியோக வேட்டையும் பட்டவேட்டையுமே குறிப்பாகக் கொண்டுள்ளது. ஏழைகளுக்கு அவைகளில் பங்குகிடையாது. எத்தனையோ டிஸ்டிரிக்டு போர்டு மெம்பர்கள் மெத்தைவீடு கட்ட அஸ்திவாரம் போட்டுவிட்டு காங்கிரஸில் சேர்ந்திருக்கிறார்கள்.

பொதுஜனங்கள் ஒன்று ஜவஹர்லால் சொல்படி நன்மை தீமைகளை பாகுபாடு செய்யாமலும் அளந்து அளந்து பார்க்காமலும் அவரைப் பின்பற்றி நடந்தால் இந்தியா க்ஷேமமுறுவது சத்தியம். அல்லது சென்னை மந்திரி கனம் பி. டி. ராஜன் அவர்கள் சொற்படி கவர்ண்மெண்டுக்கு அடிமைகளாய் அவர்களோடு ஒத்துழைத்து நமது நன்மைக்காக கெஞ்சி கேட்டு பிச்சைவாங்கி சாப்பிடுவதே இந்நாட்டு மக்களின் யோக்கியதைக்கு தக்கது. என்று திருவிளம்பற்றுகிறார். எல்லாரும் இவர் சொல்படி நடந்தாலும் உண்மையில் நன்மையே கிடைக்கும். ஒற்றுமையும் வீரமிருந்தால் முன்னது நல்லது. அவைகளில்லாத நாட்டுக்கு பிந்தியவர் வாக்கே திருவாக்காக கொள்ளவேண்டும். எல்லாரும் காங்கிரஸ் என்ற ஒரே சபையில் சேர்ந்து சீர்திருத்தங்களில் முயலவேண்டுமானால் டாக்டர் C. நடேச முதலியார் அவர்கள் திருவாக்கை பொன் மொழியாக கொள்ளவேண்டும் அதாவது ஜாதிவாரி பிரதி நிதித்துவமொன்றை மட்டும் காங்கிரஸ் ஆதரித்தால் நான் இன்றைக்கே காங்கிரஸில் சேர்ந்து விடுகிறேன்.

பெண்ணுக்கு மாப்பிள்ளையை அமர்த்தி விட்டு வாதக்ஷிணைக்காகவும் மெத்தைவீடு கட்டுவதற்கு க்டகால் போட்டுவிட்டு காங்கிரஸில் சேர்ந்து பதவி வேட்டையாட யெண்ணி மெம்பர்ஸ்தானம் வகிப்பதனால் சுயநலமின்றி பிறநலத்தை எவ்வாறு காணமுடியும்.

தேசீய ஒற்றுமை ஏற்பட்டு தேசப்பொதுப் பான்மை ஜனங்களிடத்தில் ததும்பவேண்டுமானால் மேனாட்டு மிஷனெரிகளைப்போல் இந்து பிரசாரசபை நிருவவேண்டும் ஒவ்வொரு தாலுக்காக்களிலும் 100-க்கணக்கான பிரசாரர்கள் ஏற்படுத்தப்பட்டு கிராமங்கள் தோரும் சாத்வீக பிரசாரம் செய்யவேண்டும். பிரசாரர்களுக்கு உபாத்தியார்கள் சம்பளத்திற்கு சமமாகவாவது கொடுக்கவேண்டும்

இதற்காக இந்நாட்டு பிரமூகர்களும் உத்தியோகஸ்தர்களும் தங்கள் வருமானத்தில் 4ல் 1 பங்கு பொது நிதிக்கு மாதா

மாதம் கொடுத்துதவினாலொழிய எந்த ஸ்தாபனமும் திறம்பட நடைபெறாது.

நாம் வெள்ளையர்களைப்பார்த்து பொறாமைப்படுகிறோமே யொழிய அவர்கள் சம்பளத்தில் ஓர் பெரும்பகுதி தேசீய முன்னேற்றத்தில் செலவிடுவதைப்போல் இந்நாட்டு மக்கள் ஒன்றுபட்டு பொதுஜன ஊழியர்களுக்கு கொடுத்துதவுவதில்லை. அவர்கள் தேசத்தில் செலவழித்ததுபோக மீதி பணத்தை இந்நாட்டு கிறிஸ்தவ மக்களுக்கு பெருவாரியாக கொடுத்து உதவி வந்திருக்கிறார்கள்.

ஆனால் இந்நாட்டு மக்கள் இந்த பஞ்சகாலத்தில் கூட ஒவ்வொரு ஏழ்மை கிராமத்தில் வருஷ வாரி 100-க்கணக்காக ரூபாய்களை செலவிட்டு சாமிப்பெயரைச்சொல்லி தெருக்கூத்து வைத்து மகிழ்கிறார்கள். அர்த்தமில்லாத சாமிச்செலவுக்காக வருஷாவருஷம் 100 முதல் ஆயிரம் ரூபாய் வரையில் செலவழிக்கிறார்கள் ஆனால் கிராம சீரமைப்பிற்காக செலவிடுவதில்லை.

ஜனங்களுக்கு பழைய உணர்ச்சிகளை மாற்றி புதிய உணர்ச்சியை எழுப்ப உத்தியோகஸ்தர்களே முன்னடி எடுத்து வைக்கவேண்டும். பொது நன்மைகளில் பிரசாரம் செய்கிறவர்களுக்கு தாராளமாக பொருளுதவி கொடுத்துதவ வேண்டும். உத்தியோகஸ்தர்கள் மறுத்து விட்டால் இந்நாட்டுக்கு வேறு கெதியில்லையென்று நிச்சயம் சொல்லிவிடலாம். காங்கிரஸ் ஜஸ்டிஸ்கக்ஷிகளிரண்டும் தேசப்பொதுப்பணி செய்வதில் ஒன்றுபட்டு வந்தால் எத்தனையோ தேசப்பாழான வேலைகளெல்லாம் நிர்மாணம் செய்ய சந்தர்ப்பமளிக்கும்.

கைத்தொழில்

மிஷின் அரிசி. மிஷினினால் குத்தப்படும் அரிசியினால் இதற்கு முன் பார்த்திராத புதிய புதிய வியாதிகள் தோன்றி

இருப்பதாக மேனாட்டு வைத்தியர்கள் கூச்சலிடுகிறார்கள். தவிர ஒரு மிஷின் நூற்றுக்கணக்கான ஆள்கள் வயிற்றில் மண்ணைப் போட்டுவிடுகிறது. மிஷின் முதலாளிகளுக்கு லாபத்தில் 8ல் ஒரு பாகம் தவிர மற்ற ஏழு பாகங்களும் வெளிநாட்டுக்கு செல்கின்றன.

கைக்குத்தரிசி. கையினால் நெல் குத்தும் கூத்து நெல் பட்டைகள் ஒரு டவுனில் 10க்கு மேல் நடக்கும். பத்து முதலாளிகளும் பட்டடைக்கு 25 கூலிகள் வீதம் 250 ஆள்களுக்கு வேலை இருக்கும். ஜீவாதார சத்துள்ளது. ருசியுள்ளது. நோயற்ற முறையில் இயற்கையில் தயாரிக்கப்பட்ட அரிசியும் ஆகார பதார்த்தங்களுமாகும்.

திரேக அப்பியாசம். பொதுவாக பெண்கள் ஆடவர்களைப் போல் ஊரூராய் போய் அலைந்து சம்பாதிப்பதிலும் பலவிதமான தேக உழைப்பினாலும் ஜீவனம் செய்கிறவர்களல்ல. வீட்டு விவகாரங்களையே பொதுவாய் பூர்த்திசெய்து வருகிறார்கள். ஆதலால் அவர்கள் அதிக கடுமையான வேலை செய்து தேகத்துக்கு பலத்தையும் திடகாத்திரத்தையும் சம்பாதித்து சுகவாழ்விலீடு படுவதற்குறிய சாதனங்களாய் வீடுகளில் நெல்குத்துவது மாவு அரைப்பது தண்ணீர் இறைப்பது முதலிய வேலைகள் இயற்கையாய் அமைக்கப்பட்டிருக்கின்றன திரேகத்திலுள்ள துர் நீர் வெளிப் படுத்துவதற்கு கஷ்ட உழைப்பே காரணம். இப்படிப்பட்ட உழைப்பு பெண்களுக்கு ஓர் மகத்தான நன்மைபுரிந்து வருகிறது. அதாவது பிரசவகாலங்களில் சிறிதும் உபத்திரவமின்றி எளிதில் பிரசவமாவதற்கு உழைப்பும் ஒன்றாகும் கைக்குத்து அரிசியினால் தேகத்துக்கு பலம் அழகு திடபுத்தி உண்டாகிறது. அரிசிருசியும் ஜீவசத்துள்ளதும் வியாதியற்றதும் லாபத்தை உண்டாக்கக்கூடியதுமானது ஆகையால் முதலாளிகள் நெல்குத்து பட்டடை ஆங்காங்கு ஸ்தாபித்து ஏழை கூலிகளுக்கு கஞ்சி வார்ப் பார்களென கோரப்படுகிறது. திண்டிவனம், விழுப்புரம் முதலிய பல இடங்களில் மிட்டாய் கடைகளில் மாவு கைசுற்று இயந்தரத்தினால் அரைக்கப்பட்டு பலகாரம் செய்யப்படுவது நல்ல முறை

யாகயிருக்கிறது. திண்டிவனம் கூட்டுரோட்டிலுள்ள ஓர் மிட்டாய் கடையில் கையினல் மாவு சயாரித்துக்கொள்வதினல் 10 ஆட்கள் வேலை செய்கிறார்கள். பலகாரம் மிக்க ருசியோடிருக்கிறது. மணிலாபயிர்களும் கல்லக்குரிச்சி தாலுக்கா தவிர மற்ற இடங்களில் பெரும்பாலும் கையினலேயே தடியால் அடித்து பயிர் சேர்க்கிறார்கள். மிஷன் மணிலாபயிரைவிட அடிப்பயிர் நல்ல விலைக்கு விற்கப்படுகிறது.

மிஷன் முதலாளிகள் ஜனங்கள் கைத்தொழிலுக்கு பங்கமில்லாத வேறு முறைகளில் மிஷனை உபயோகப்படுத்தி லாபமடைவார்களாக. வயல்களுக்கு தண்ணீர் இறைப்பது முதலிய விஷயங்களில் மிஷனை உபயோகப்படுத்தலாம்.

மார்வாரிகள் சூழ்ச்சி.

எவ்வளவு தூரம் ஏழைகளுக்கு கஷ்டமும் பஞ்சமும் உண்டாகிறதோ அவ்வளவுதூரம் பணக்காரர்களுக்கு லாபம் உண்டாகிறது. பணப்பெட்டிகள் நிரப்பப்படுகின்றன. சுமார் ஆயிரம் மைமிலுக்சப்பாலிருந்து வந்து இந்த பாங்குகடைகள் வைத்திருக்கும் மார்வாடிகள் ஜனங்களிடம் பொருள் பறிக்கும் தந்திரமுறை மேனட்டு முறையிலும் சிறந்ததென்னலாம். பித்தளை மற்ற சாமான்களுக்கு 1 ரூபாய்க்கு வருஷம் முக்கால் ரூபாய் முதல் ஒன்னரை ரூபாய் வரையில் வட்டி வாங்கப்படுகிறது பாவம் பொன், வெள்ளியில்லாத ஏழை ஜனங்கள் எதை அடகுவைப்பார்கள்? துணி சாமான் முதலியவைகளை ஒரு ரூபாய் பொறுமானதுக்கு கால் ரூபாய்மேனிக்கு பணம் பெறுகிறார்கள். அதை அவர்கள் ஒருக்காலும் திரும்பிவாங்கப் போவதில்லை. வைத்த நகைகளை திருப்பி வாங்கவந்தால் நகைகளை கண்டுபிடிப்பதற்காக பல நாள் காத்திருக்கவும் சாப்பாட்டு சிலவு வைத்துவிடுகிறார்கள். தவிர மார்வாடிகள் ஒருவரிடம் வாங்கின நகைகளை மற்றொரு மார்வாடியிடம் அடகுவைத்துவிட்டு பணம் வாங்கி வியாபாரம் செய்வதினல் சீக்கிரம் நகைகளை பட்வாடா செய்வதற்கு அசந்தர்ப்பமுண்டாகிறது இதனல் பல ஏழைகள் பட்டினிகிடக்க நேரிடுகிறது.

சினிமா பகுதி.

நாடக மேடைகள் மக்களை ஏமாற்றி தீய காரியங்களில் அழைத்துச்செல்லும் பிசாசின் தூதனைப்போலிருந்து வந்தது இவ்வித நாடக மேடைகளை உத்தம கிறிஸ்தவர்களும், சன்மார்க்க குழாங்களும் பகிஷ்கரித்து வந்தார்கள். கோடானு கோடி சீர்திருத்த கிருஸ்தவ மகம்மதியமக்கள் நாடககொட்டாய் களில் அடிவைத்தே யிருக்கமாட்டார்கள் என்பது நிச்சயம்.

அப்படியிருக்க அந்த அயோக்கியத்தனத்தை தோற் கடிக்கும்படியாய் ஓர் பெரும்பூத சக்தியினால் காட்டப்படும் சினி மா படகாக்ஷிகள் மனித சமூகத்தையும் அவர்கள் வழக்கவொழுக் கங்களையும் அவர்கள் ஆத்ம வாழ்க்கையையும் பாழ்படுத்தி வருகிறது சினிமா காக்ஷிகளில் நன்மைகள் சில இருப்பினும் அவையனைத்தும் அதனால் ஏற்படும் பாதகங்களுக்கு ஒருக்காலும் சரிக்கட்டாது.

சினிமா படக்காக்ஷிகள் பொருளாதார நிலைமை நாசப் படுத்துகிறது. 2-வது மக்களின் சன்மார்க்க பாதையை நாசப் படுத்துகிறது 3 வதாக பாமரமக்களின் உயிர்க்கு ஆபத்தாகிறது. மனிதன் செய்யவேண்டிய காரியங்களை தவிர்த்து செய்யத்தகாத காரியங்களில் புத்தி பிரவிர்த்திக்கிறது.

சினிமா படக்காக்ஷிகள் இந்நாட்டு சமயக்குரவர்களாலும் மேனாட்டு மிஷனெரிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட முறையில் சேகரம் செய்யப்பட்டு வந்தால் அது உலகுக்கு பெரு நன்மையை பயக்குமேயன்றி இயற்கைக்குமாறான விஷயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு அதற்காக லக்ஷக்கணக்காக மூலதனம் வைத்து போட்ட் பணத்தையும் லாபத்தையும் பறிக்க நீர் அட்டைபோல் மனிதர்களுடைய செல்வத்தை உறிஞ்சுகிறது. இதற்காக ஆயிரக் கணக்கான சினிமா கம்பெனிகள் தினம் தினம் புறப்படுகின்றது. பொதுவாய் மனிதர்களின் வாழ்க்கைக்கு வேண்டிய ஆயிரக் கணக்கான விஷயங்களில் சினிமா காக்ஷி ஒன்று. எனவே எல்லா

விஷயங்களையும் மூடிவிட்டு மக்கள் சினிமா காக்ஷியிலேயே பணத்தை செலவிடுவதால் தர்மமெல்லாம் பாழாய் போகிறது. நல்ல சாப்பாடு துணிமணிகளன்றியும் புத்திவிர்த்திக்கேற்ற நூல்களை படிக்க காலமும் காசும் அற்ற பாம ஏழைகளைகூட சினிமா ஏமாற்றி காசைப் பிடுங்கிவிடுகிறது.

மனித சக்தியினால் காட்டும் உத்தம நாடகங்களை பார்ப்பதைவிட எலக்டிரிக் பூதசக்தியினால் காட்டப்படும். நாடகவிமர்சனங்கள் இயற்கைக்கு மாறானவையென்ன பகுத்தறிவுள்ள ஒவ்வொரு வாலிபரும் நன்குமதிக்கவேண்டும். மனித சக்தியினால் செய்யக்கூடிய காரியங்களை விட்டு மாயாஜாலங்களால் காட்டப்படும் காக்ஷியை கண்டு மகிழ்வது சுய மரியாதை மாணவர்களுக்கு அழகாகுமா?

சினிமா படக்காக்ஷிகள், மோட்டார், ஆகாயவிமானம் முதலிய பலவித மேனாட்டாரின் அபூர்வ சக்திகளைக்கண்டு நாம் பெருமைபடுத்தி அவர்களை புகழவேண்டுமேயொழிய தர்பாக்கிய இந்தியாகிய நமது வாழ்க்கைக்கு உற்ற சாதனங்களாக அவைகளை வாங்கவும் அனுபவிக்கவும தகுதியற்றவர்கள் என்பதைத் தனிமையான இடங்களில் உட்கார்ந்து சிறிதுநேரம் ஆலோசித்து பாருங்கள். (தொடரும்.)

சுயமரியாதை வீரர்கள் தரித்துக்கொள்ளவேண்டிய கங்கணம்.

1. கையினால் குத்தப்படும் அரிசியை உபயோகித்தல். தன்னாலும் தனது நண்பர்களாலும் தயாரிக்கப்பட்ட ஆகார பதார்த்தங்களை உபயோகித்தல்.

2. தனது உறவினர் நண்பர் முதலியவர்களால் நூற்கப்பட்டு கைத்தரிகளில் தயாரிக்கப்பட்ட வஸ்திரங்களை சதா அணிந்து கொள்ளல்.

3. சினிமா காக்ஷிகளையாவது வேறு நாடக காக்ஷிகளையாவது பார்ப்பதிலிருந்து விலகுதல்

4. பிரதிதினம் 10 மைலுக்கு அப்பால் போகவேண்டி ஏற்பட்டாலொழிய மோட்டார் ரயில்களை உபயோகித்தல் கூடாது. தினம் சராசரி நாலணு வருமானமிருந்தாலொழிய 50 மைலுக்குள் பிரதேசங்களில் போக்குவரத்து நடந்தே செல்லவேண்டும்

5. கூடியவரையில் சாதாரண வியாதிகளுக்கு இந்நாட்டு மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகளை உபயோகித்தல். தீராத வியாதிகளுக்காக நவீன முறைப்படி தயாரிக்கப்பட்ட மேனாட்டு முறைகளையும் ஆதரிக்கலாம்.

6. உள்நாட்டு கைத்தொழில் சாமான்கள் தவிர வெளிநாட்டு கைத்தொழில் சாமான்களையும் கையாளாமலும் வாங்காமலும் இருத்தல். உள்நாட்டு சாமான்களாயிருந்தாலும் தன்னூரிலும் தன் ஊருக்கு சமீபத்திலுள்ள கிராமத்தில் அந்த சாமான் கிடைக்கும்பொழுது தூர இடங்களிலிருந்து வரவழைப்பதும் வாங்குவதும்கூட தவருகும் ஏனெனில் சகோதரத்தன்மை என்பது தன்னேடு சேர்ந்தவர்களை ஆதரிப்பதேயாகும் கொஞ்சம் கிராக்கியாயிருந்தாலும் தன்னூர் சாமானை வாங்குதலும் அதிக கூலி கொடுத்தாலும் தன்னூர் ஜனங்கள் தன்னைச்சேர்ந்தவர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்ளுதலே சகோதர அனுதாபமாகும். வெள்ளைக்காரர்கள் இவ்வித நோக்கத்தில் சிறந்தவர்கள் என்பது மிகையாகாது.

7. நம்மைச்சேர்ந்த தொழிலாளி தச்சன் கருமான் சேடன் உழவர் வண்டிக்காரன் முதலிய நூற்றுக்கணக்கான தொழிலாளிகளை நாம் எப்படி காப்பாற்றுவது. அவர்கள் தொழில்களை எந்த முறையில் ஆதரிப்பது என சதா யோசித்தல். நமது சகபாடிகளாகிய தொழிலாளிகளுக்கு எவ்வளவு கொடுக்கிருேமோ அவ்வளவு நமது சுகத்திற்கும் கைம்மாற்று லாவாதேவிக்கும் ஆதாரமானதென்னும் சூக்ஷ்ம அர்த்தத்தை பகுத்தறிந்து கொள்ளல்

8. கிராமவாழ்க்கையும் கிராம ஆகாரவசதியும் ஒரு மனிதனின் நீண்ட ஆயுளையும் சுகத்தையும் கொடுக்கும் என்னும் சித்தாந்தத்தை கடைப்பிடித்தல் (கிராமங்களில் வாழ விரும்புதல்.)

9. பட்டணவாசங்களை சீர்திருத்தம் செய்ய முயலுவதை விட கிராமங்களை சீர்திருத்த முயலுதலே தர்மஸ்தாபனத்தை நிலை நாட்டுதலொக்கும்.

10 சாத்மீக வாழ்க்கையும் பொருளை பிரித்துக்கொடுத்து தானும் உண்ணும் வழக்கங்களில் மனிதனை பழக்குதல்.

இவ்வித பத்து காரியங்களில் தான் தவறாது நடப்பதாக வைராக்கியம் செய்துக்கொள்கிறவனே சுயமரியாதைக்காரனென ப்படுவான்.

வெள்ளைக்காரரின் பெருநோக்கு.

விருத்தாஜலம் டவுனில் தற்போழ்து டேனிஷ் மிஷனெரியாயிருக்கும் P. வான்டேல் அவர்களின் பெருந்தகைமை என்றும் பலரால் புகழத்தக்கது சிலதினங்களுக்கு முன் மிஷன் பங்களாவிற்கு எனது நண்பர் ஒருவரின் உறைவிடத்தை வினவ சென்றிருந்தேன். அந்த Rev. "P. Wandall" மிஷனெரி அன்றுதான் நீலகிரியிலிருந்து தன் மனைவி சகிதம் வந்து இறங்கி சாமான்களை எடுத்து அலங்கரித்துக்கொண்டிருந்தார். எனது நண்பர் விலாஸத்தை தெரிந்துக்கொண்டவுடனே சமரசப் பத்திரிகையின் விபரத்தைப்பற்றி 2 நிமிஷநேரம் பேசினபிறகு தாங்களும் சந்தா கொடுத்துதவவேண்டுமென கோரினேன் உடனே எழுந்து ரூ 1—4—0 கொடுத்து ரசீது பெற்றுக்கொண்டார். பிறகு எனது பிரயாண அலுப்பை தீர்த்துக்கொள்ளும்பொருட்டு விடைபெற்றுக் கொண்டு அறைக்குள் போய்விட்டார். இம்மாதிரி இந்து பிரபுக்கள் நடந்துக்கொண்டால் நம்நாடு எவ்வளவு முன்னேற்றமடையும் என்பதை யோசிப்பவருண்டா? விருத்தாஜலம் கோவில் தர்மகர்த்தா ஷண்முகம் பிள்ளை அவர்கள் ஓர் பிரபுகூட்டத்தை

சேர்ந்தவர். அவரிடம் சந்தாவுக்காக நான்குமுறை சென்றிருந்தேன் கொடுப்பதாக காலத்தை குறிப்பிட்டுக்கொண்டே வந்தார் கடைசியாக எனக்கு பத்திரிக்கை பிடிக்கவில்லை என்று பதில் சொல்லிவிட்டார் உங்களுக்கு பிரயோஜன மில்லாவிட்டாலும் மற்றவர்களுக்காவது பிரயோஜனப்படும்படி சந்தா கொடுத்துதவலாகாதாவென வினயமாக கேட்டுக்கொண்டேன். ஒன்றும் பயனில்லாமல் போய்விட்டது இம்மாதிரி நூற்றுக்கணக்கான பிரபுக்கள் நம் தமிழ்நாட்டில் வாழ்ந்துவருகிறார்கள்.

கதர்.

ஒருகாலத்தில் காமதேனுவின் பெருமைகளைப்பற்றி பல புராணங்களில் கூறப்பட்டிருக்கிறது காமதேனு என்றால் வேண்டிய உணவுகளையெல்லாம் படைக்கக்கூடியது என்பது பொருள். அஃது இக்காலத்து காணுதலும் அதன் பலனை பெறுவதற்கும் முடியாது. ஆனால் காமதேனுவுக்கு பதிலாக இப்பொழுது இந்நாட்டு மக்கள் புனர்வாழ்க்கையை யடைவதற்கு கை இராட்டையால் நூற்ற நூல்களைகொண்டு கைத்தறிகளில் நெய்யப்பட்டு உடுத்தப்படும் கதர் ஆடைகளையென்னபறை சாற்றலாம். காமதேனு எவ்வாறு தேவர்களின் பசியை தீர்க்கிறதோ அவ்வாறே ஏழைமக்களின் தீராப்பசியை கதர் ஆடைகள் ஒவ்வொருவரும் அணிவதால் ஓட்டிவிடுகிறது. சத்தியமும் சாத்வீக முற்ற பெண்மக்களை கண்டுபிடிக்கவேண்டுமானல் கைராட்டையில் நூல் நூற்கும் பெண்மணிகள் தாமென உறுதி கொள்ளல் வேண்டும். கதர் ஆடைகள் ஏழைகள் அணிவது விலை ஏற்றத்தால் கொஞ்சம சிரமமாயிருப்பதால் பணக்காரர்களும் உத்தியோகஸ்தர்களும் கதர் ஆடைகளை கட்ட முன்வரல்வேண்டும். ஏழைகள் கதர் ஆடைகளை தயாரிக்க முன் வரல்வேண்டும். (தொடரும்)

ஓட்டுரிமை.

நமது நாட்டில் சுய ஆக்ஷிக்கு ஆதாரமாயுள்ள லோகல் போர்டு யூனியன், சட்டசபை முதலியவற்றிற்கு மெம்பர்கள் தேர்ந்தெடுப்பதற்கு ஓட் கொடுக்கும் முறையையும் சுறுங்கக்கூறுவோம் ஓட்டுரிமை பெற்று கீழான அல்லது மேலான அந்தஸ்தில் விற்றிருக்க ஆசைப்படுகிறவர்களுக்கு பலவித யோக்கியதைகள் அமைந்திருத்தல் வேண்டும் கிராம பஞ்சாயத்து சம்பந்தமான பஞ்சாயத்து மெம்பர்கள். தாய்ப்பாஷையில் விசேஷ அறிவும் சாஸ்திரஞானமும், அமைந்திருத்தலோடு பெரிய குடும்பியும் நித்திய அனுஷ்டானம், பக்தி, தன் குடும்பத்தை உத்தம நிலையில் ஒற்றுமை வகித்து காப்பாற்ற கூடிய சக்திவாய்ந்தவராய் இருத்தல் முக்கியம் இவர் சமய சடங்குகளாகிய கல்யாணம், உபந்நியாசங்கள், நடைபெறும் காலங்களில் தலைமை வகித்து சிறப்பாக நடத்துதற்கு திறமை வேண்டும் தன் குடும்பத்தை அடக்கி ஆளவும், ஊர் பொதுக் காரியங்களை சிறப்பாக நடத்தமுடியாத ஒருவர்க்கு பஞ்சாயத்தாராக வீற்றிருப்பது வெட்கங்கெட்ட தன்மையும், ஆபத்தும், பாபமான காரியமாகும் தாலுகாபோர்ட் மெம்பராக வீற்றிருப்பவர் சாஸ்த்திர ஆராய்ச்சி, வர்த்தமான பயிற்சி கவர்ண்மெண்டையாவது, பிரஜைகளையாவது எதிர்பாராமல் ஜீவிக்கவும், பொது நன்மைகளில் உழைக்கவும் போதுமான ஸ்திதி, சிறிது ஆங்கில அறிவு, தனது குடும்பத்தையும் வியாபார விவசாய முதலியவைகளை மேல்பார்ப்பதற்கு தான் மெம்பர் ஸ்தானம் வகிக்கும் கால மட்டும் தக்க புருஷர் தன் குடும்பத்திலிருக்கவோ, அல்லது நியமிக்கவோ வேண்டும் மெம்பர் காலம் முடியும் பரியந்தம் சதா பொது நன்மைகளில் உழைக்கவும், சர்க்கூட் போவதும் சமயத்துக்கு தக்கபடி வேடந்தரித்து சாரணவேலை செய்வதும் வேண்டும் சபைகளில் நீதியும் நியாயமுமென்று தோன்றும் விஷயங்களை ஸ்தாபிக்க சொற்பசாதுர்யமும், அமைதலும், பிடிவாதமும், பயமின்மையும் வேண்டும். பிரஸிடெண்டு ஸ்தானத்தை வகிக்க ஆங்கிலத்திலும், தாய்ப்பாஷையிலும் விசேஷ அறிவு வேண்டும். உலக வர்த்தமானம் பொதுவான ராஜாங்க சட்டம், மேனாட்டு

நாகரீகத்தின் போக்கு முதலியவைகள் தெரிந்திருத்தலோடு ஒந் வரை எதிர்ப்பார்த்து சிலவு செய்யவும் தான் வேலையிலிருக்குங் காலமுடிய தனது குடும்ப விவகாரங்களில் சம்பந்தமில்லாமலும் இருத்தல் அவசியம். இப்பதவி குடும்ப வாழ்க்கையை சிறப்பாய் நடப்பதற்கு திறமை பெற்று பஞ்சாயத்து மெம்பர், தாலுக்கா மெம்பர் முதலிய ஸ்தானங்களை வகித்து பழக்கம் பெற்ற பின்னரே இப்பதவி தகுதி தவிர அவர் ஸ்தானம் விகிக்கும் பிரதேசங்களில் ஒவ்வொருவரும் தன்னையறிந்தவராயும் பொது ஜனங்களுக்கு பலவிதத்தில் உதவி செய்தும் நீதியை செலுத்தின உத்தமர்களையே பொது ஜனங்கள் பிரஸிடெண்ட்டாக நியமித்தல் வேண்டும்.

சட்டசபை மெம்பர்கள் அப்பிரதேசத்தில் நடைபெறும் எல்லா பாஷைகளிலும் சாதாரண அறிவும் சுயபாஷை, ஆங்கிலத்தில் தீர்க்க ஞானமும் பெற்றிருத்தல் வேண்டும் சுதேச உணர்ச்சி அரசாங்க பொறுப்பு, காலத்தையும், காரியத்தையும், அருமையும் பெருமையுமாய் நடத்துதற்கு தக்கராயிருத்தல் வேண்டும். சிலர் முற்கூறிய அனுபவங்களில் பிரவேசித்து அனுபவம் பொதுஜன உபகாரியுமாய் இருத்தல் நன்று

தன் இல்லறத்தை சுகாதாரத்திலும் தர்மத்திலும், ஒழுங்கு படுத்தி குடும்பத்தவரை உத்தமவாழ்க்கையில் ஒற்றுமை படுத்தி நடத்துதற்கு இயலாத ஒருவர் எவ்விதத்திலும் அரசாங்க நிர்வாகத்தில் பிரவேசித்தலாகாது. இந்நாட்டில் பெரும்பாலோரான சட்டசபை தாலுக்போர்ட் மெம்பர்கள் எவ்வித விஷயத்திலாவது திறமை பெற்றவர்களாக நம் நாட்டில் கிடையாது இவர்கள் நோக்கமெல்லாம் பணத்தை பெருதற்கே ஸ்தானம் வகிக்கின்றனர் சிலர் தங்களுக்கு ஓட்டு பெறுவதற்கு தேவர்கள் அமுதத்தை வினியோகித்ததுபோல் சாராய பீப்பாக்களை திறந்துவிட்டு குடிக்க வைக்கின்றனர். சில ஆயிரக்கணக்கான ரூபாய்களை பாகித்து கொடுக்கின்றனர். சிலர் இரவு பகல் ஓய்வில்லாமல் ரதசாரத்துவம் செய்துக்கொண்டு ஜனங்களிடத்தில் இச்சகம் பேசிக்கொண்டும் சுழலுவர். வேறு சிலர் தன்னால் முடியாத காரியங்களை சாதிப்ப

..கவும் எந்த கக்ஷிக்கு சௌகர்யமிருக்கிறதோ தான் அந்த கக்ஷியை சேர்ந்தவனென்றும் சொல்லி ஓட்டுபெற அவாமேலிடுகின்றனர். உண்மையிலேயே இவர்களெல்லாம் மெம்பர் ஸ்தானத்தை வகிப்பதற்கு சாலவும் அருகரல்லர்.

மெம்பர் ஸ்தானம் வகிப்பதற்கு பலநாட்களுக்கு முன்னரே பொது மக்களுக்கு ரீதியிலும், நெறியிலும் பேருதவி புரிந்திருத்தல் வேண்டும். அன்னமிடல், குடிசையமைத்து கொடுத்தல், மானம் காத்தலாகிய வஸ்திரம் வினியோகித்தல் ஊர் பொது நன்மைகளில் உடன்படல், கொடிவழி வண்டிபாதை குளம், குட்டை முதலியவைகளில் சீர்படுத்துவதில் அரிய காரியம் புரிந்து பொது மக்களால் பரோபகாரியென பெயர் பெற்றபின்னரே அப்பதவிக்கு அபேக்ஷகராக நிற்கும் பக்ஷத்தில் அவற்கு சிலவில்லாமலே ஓட்டு பெறுவது ஆயிரத்தாலு முண்மை அதுதான் நீதியும் புண்ணியமுமானவழி. அது தான் பிரஜாதி பத்தியத்தின் உண்மை. அப்படிப்பட்டவா ேதவர்களையும் மனிதர்களையும் ஆக்ஷி புரிய ஆதிக்கம் பெற்றவருவர்.

செய்வன செய்தொழுகாமல் செய்யத்தகாத காரியங்களில் ஈடுபட்டு துன்மார்க்க காரியங்களின் மூல்யமாய் பொருளைக்குவித்து பிறகு அரசாங்க பதவியில் வீற்றிருக்க இடம் கோலுகின்றனர். அவர்கள் ஆரம்பமே சாராயம் ஊற்றி ஓட்டு பெறுவதாயிருந்தால் அவர்கள் எப்படி மதுபானத்தை விலக்குவதற்கு சட்டம் இயற்றுவர். ஆரம்பமே லஞ்சம் கொடுத்து ஓட்டு பெற்றால் அவர்கள் லஞ்சம் யென்றும் மாயாசக்தியை ஒழிக்க எதுவழி தேடுவர். ஆரம்பமே சமயத்துக்கு தக்கபடி இசைபாடுகிறவர்கள் பின்னர் என்னெறியில் ஸதிரமாக வைராக்கியத்தோடும் பொதுஜன சேவை செய்யப்போகின்றனர். ஆரம்பமே படோடம்பங்களில் அபரிதமாக சிலவு செய்ய துணிகிறவர்கள் பின்னர் பொது ஜன பணங்களை எப்படி சிக்கனப்படுத்த உரிமையாளராவர். இவைகளெல்லாம் சுய ஆக்ஷி தத்துவம் அறியாத மக்களின் கூற்றாகும்.

இனி மேனாடுகளில் ஓட்டுபெறும் முறைகளை சிறிது சிந்திப்போம். (தொடரும்)

சமாச்சார[ ]திரட்டு.

விழுப்புரம் முனிஸிபாலிடி ஓவர்ஸியர் வெங்டாஜல சர்மா அவர்கள் முனிஸிபாலிடி வேலைகளை திறமையாகவும் உற்சாகமாகவும் செய்வதோடு பொது ஜனங்களுக்கு நன்மையாக பாடுபடுகிறார் என்று நமது நிருபர் A. ராமசாமி பிள்ளை அவர்கள் அறிவிக்கிறார்.

* * *

லாகூருக்கருகிலுள்ள ராவி நதியின் சேட்டைகள் மழையாலும் வெள்ளத்தாலும் 32 கிராமங்களில் தண்ணீர் புகுந்து அழித்துவிட்டது 592 வீடுகள் நாசம். 60 மாடுகள் இறந்தன. 80 ஆயிரம் ரூபாய் நஷ்டம்.

* * *

பர்மாவில் 1 லக்ஷம் பொருமான நெற்பயிர்கள் வெள்ளக் கொடுமையால் நாசமாக்கப்பட்டன.

* * *

கங்கை நதிக்கரையிலும் இதன் கிளை நதிக்கரையிலும் ஏராளமான பிணக்குவியல்கள் வெள்ளத்தால் நேர்ந்திருக்கின்றன. டோர்னுக்கு அருகிலுள்ள வடக்கு கார் ஹால் வெள்ளச்சேதத்தால் 7 கிராமங்கள் மண்ணால் மூடப்பட்டதாம். தூங்கிக்கொண்டிருந்த ஜனங்களெல்லாம் மண்ணுக்குள் மறைந்தனர். வடதேசங்களில் பாட்னா முதலிய பல இடங்களில் இவ்வெள்ளக் கொடுமைகளால் லக்ஷக்கணக்கான சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

* * *

சோவியத்ரக்ஷியாவில் இப்பொழுது 160 பாஷைகள் பேசப்படுகிறதாம்.

* * *

முகம்மது நபியின் நேர் சந்ததியில் வந்தவரான இராகி அரசரின் மூத்த சகோதரி இளவரசி ஆஸாதனது மதத்தை துறந்து ஓர் இத்தாலிய போட்டரை மணந்துகொண்டாள்.

* * *

ஸ்பெயினில் மும்மரமாக கலகம் நடந்துவருகிறது. சர்க்கார் சார்பிலும் கலகக்காரர்கள் சார்பிலும் பெரு நஷ்டம் இருன் நகரம் தீக்கிரையாகிவிட்டது.

* * *

விழுப்புரத்தில் காலரா அதிகமிருப்பதால் வெளியூர் ஜனங்களுக்கு பரவாதபடி ஏன் சினிமாவை வெளி கிளப்பக் கூடாது. சினிமா நாடகத்தை பார்க்க வருகிறவர்கள் மூலமாய்தான் அதிகம் காலரா பரவுகிறது கமிஷனருக்கு மனமிறங்கவில்லையா?

* * *

பட்டு வஸ்திரங்களை துவைக்கும் ஜலத்தில் கொஞ்சம் உப்பை கலந்துகொண்டால் சாயம் போகாது பளப்பளப்பாக இருக்கும்.